தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 85/மா/2026
நாள் 12.10.2026

M. பிரபாகரன்,
கோயம்புத்தூர்–641 041. --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மேற்கு மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர்–641 041, P.N. புதூர், விவேகானந்தர் வீதி முதல் கிராஸ், பழைய எண் 25, புதிய எண் 14–1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. பிரபாகரன் என்பவரின் 02.03.2026 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 03.03.2026 அன்று பெறப்பட்டு 85/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

கோயம்புத்தூர்–641 041, P.N. புதூர், விவேகானந்தர் வீதி முதல் கிராஸ், பழைய எண் 25, புதிய எண் 14–1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. பிரபாகரன் என்பவர் தனது 02.03.2026, 09.04.2026 மற்றும் 09.08.2026 நாளிட்ட முறையீட்டு மனுக்களில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

02.03.2026 நாளிட்ட மனு:

"எனது பாட்டனார் திரு. மாரிமுத்து நாயக்கருக்கு 1954–ஆம் ஆண்டு (1300/1954) பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலமாக வந்த சொத்தில் ஒரு பகுதியை திருமதி. இந்திரா அழகப்பனை எங்கள் குடும்ப பவரேஜென்டாக நியமித்து லே–அவுட் பிரித்தோம்.

அதற்கு "ஸ்ரீ ராஜராஜேஸ்வரி எஸ்டேட்" என்று பெயரிட்டு கோயம்புத்தூர், கோயமுத்தூர் உள்ளூர் திட்ட குழுமம், உறுப்பினர் செயலர் அவர்களால் 106அ/2000, நம்பராக திட்ட அனுமதி வழங்கப்பட்டு, Revised plan. "Group Housing scheme" in SF No:354 Part, 355/1 Part and 359 Part of Telegupalayam Village, Coimbatore Corporation LPA No:865 Dt 12.10.2000. கோயம்புத்தூர் கார்ப்பரேஷன், மேற்கு மண்டலம், உதவி நகர திட்ட அலுவலர் அவர்களால் 07.09.2001 தேதியில் C.A. No.17/2001/H1, B.L. No.40/2001/H2 (dated 30.03.2001) P.A. No.144/2000/H2 நம்பராக அங்கீகாரம் பெறப்பட்டது.

லே–அவுட் அங்கீகாரம் பெறும்பொழுது, எங்கள் தோட்டத்தில் சுமார் 300 ஆண்டுகளாக அஸ்தாந்தர கொள்ள நாயக்கர் (யானை குலத்திற்கான) குல தெய்வம் "வீரமாத்தி அம்மன்" மரத்தின் அடியில் இருந்தது. எனவே மரம் மற்றும் அதன் சுற்று பகுதியை நாங்கள் ரிசர்வ் சைட் ஆக கூறி (காட்டி) திட்ட அனுமதி பெற்றிருக்கிறோம்.

லே–அவுட் பிரித்தால் அதிலுள்ள பாதை மற்றும் ரிசர்வ் சைட்டை மாநகராட்சிக்கு கொடுக்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கும்பொழுது, எங்களது பவரைஜெண்டும் மாநகராட்சி அதிகாரிகளும் திருமதி சுந்தரி, திலகவதி, கவிதா அனைவரும் கூட்டுச்சதி செய்து அரசாங்கத்திற்கு பேரிழப்பு செய்ததோடு சுமார் 800 குடும்பங்கள் ஆடி பண்டிகை போன்ற நிகழ்வுகளின் பொழுது இந்த ஆக்கிரமிப்பனால் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கியும் பாதையை ஆக்கிரமித்ததால் கூட்ட நெரிசல் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

சாதாரண குடிமகன் வீடு கட்ட வீட்டு மனைக்கு அங்கீகாரம் வேண்டும் என்கிறார்கள். கட்டிடம் கட்ட கட்டிட அனுமதி வேண்டும் என்கிறார்கள். ஆனால் இவர்கள் ரிசர்வ் சைட்டில் மூன்று மாடி கட்டிடம் கட்ட மாநகராட்சியின் எந்த விதி அனுமதி அளிக்கிறது என்று தெரியவில்லை.

கடந்த 26.03.2025 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் மனு கொடுத்த பொழுது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அதிகாரிகள் தாங்கள் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு வரைபடம் இவ்வலுவலகக் கோப்பில் இல்லை என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்று கொடுக்கிறார்கள். வரைபடம் அலுவலகக் கோப்பில் இல்லையா? அல்லது நீக்கப்பட்டு விட்டதா?

கடந்த 07.04.2025 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் மனு கொடுத்த பொழுது, அதிகாரிகள் பிரிவு 2 (f) படி தகவல் வழங்க இயலாது என்று கூறியுள்ளனர். ஆனால் உயர் நீதிமன்றம் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 8 மற்றும் 9 அடிப்படையில் மட்டுமே தகவல் மறுக்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அதிகாரிகள் ஆக்கிரமிப்பாளருக்கு உதவும் பொருட்டு பிரிவு 2(f)படி எனது விண்ணப்பத்தை நிராகரித்துள்ளனர்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 24.06.2025–ம் தேதியிட்ட கடிதத்தில் தாங்கள் குறிப்பிட்டுள்ள SF No.354, 355/1, மற்றும் 359 தெலுங்குபாளையம் கிராமம், மனைப்பிரிவு வரைபடம் கிடைக்கப் பெறவில்லை. மனைப்பிரிவு வரைபடம் பெற உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்ட குழுமம் கோயம்புத்தூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மனைப்பிரிவு வரைபடம் கிடைக்கப்பெற்ற பின்பு தங்கள் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்று உதவி ஆணையர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர் கடந்த 24.06.2025 அன்று கூறியிருந்தார். ஆனால் எட்டு (8) மாதங்கள் ஆகியும் எந்தவித பதிலும் கொடுக்கவில்லை.

மாநகராட்சி அதிகாரிகளிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி விண்ணப்பம் அளித்தாலும், உதவி ஆணையரிடம் புகார் மனு அளித்தாலும் எந்தவித பயனும் இல்லை. எனவே முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு கடந்த 14.07.2025 அன்று விண்ணப்பம் செய்து இருந்தேன். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 30.10.2025–ம் தேதியிட்ட கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், தெலுங்குபாளையம் கிராமம், 7E, ஸ்ரீநகர், ஸ்ட்ரீட் நம்பர் 4–ல் தாங்கள் புகார் மனுவில் தெரிவித்துள்ள கட்டிடம் தொடர்பாக விவரம் கேட்டு கடிதம் அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுப் பாதையை கடந்து ரிசர்வ் சைட் அமைகிறது. மேலும் பொதுப் பாதை மாநகராட்சி சர்வே ஆவணங்களில் பிரிபடாமல் உள்ளது என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த நான்கு (4) மாதங்கள் ஆகியும் கட்டிடத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று முதலமைச்சர் பிரிவிற்கு கூட பதில் கூறாமல் இருப்பதற்கான காரணம் என்ன. 2000–ல் லே–அவுட் பிரிக்கப்பட்டுள்ளது. கடந்த 25 ஆண்டுகளாக மாநகராட்சியின் சர்வே ஆவணத்தில் பிரிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன.

சர்வே ஆவணத்தில் பொதுப் பாதை பிரிக்கப்படாத பொழுது எப்படி பொதுப் பாதையை கடந்து ரிசர்வ் சைட் அமைகிறது என்று உதவி ஆணையாளர் மேற்கு மண்டலம் கூறுகிறார் என்பது எனக்குப் புரியவில்லை.

தரைத்தளத்திற்கு மட்டும் வரிவிதிப்பு செய்து மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு பெற்றுள்ளனர். ஆனால் இரண்டாவது மற்றும் மூன்றாவது தளத்திற்கு வரி விதிப்பு கூட செய்யாமல் வரி ஏய்ப்பு செய்கின்றனர்.

கட்டிட அனுமதி இன்றி, மூன்று மாடி கட்டிடம் கட்டும் வரை மெத்தன போக்குடன் செயல்பட்ட மாநகராட்சி அதிகாரிகளுக்கும் தற்போது வரை ஆக்கிரமிப்பாளர்களுக்கு துணை நிற்கும் அதிகாரிகளின் மீதும் அதிகார துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரிகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி இந்த முறைமன்றத்தினை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.''

09.04.2026 நாளிட்ட மனு

"நான் 02.03.2026 அன்று Speed Post எண் **ET564413958IN** மூலம் உங்கள் அலுவலகத்திற்கு பதிவு தபால் வாயிலாக அனுப்பிய மனு **மனு படிவம் எண்–I** ஏற்கப்பட்டுள்ளதா அல்லது மனுவை நேரில் சமர்ப்பிக்க வேண்டுமா என்பதை அறிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அனுப்பிய மனுவின் நகல் மற்றும் அஞ்சல் அனுப்பிய விவரங்கள் (Electronic Proof of Delivery மற்றும் Postal Tracking Report) உங்கள் பார்வைக்காக இணைக்கப்பட்டுள்ளன. மேலும், வழக்கு தொடர்பான **லே–அவுட் பிளான்** மற்றும் **encroachment விவரங்கள்** ஆகியவையும் உங்கள் பார்வைக்காக இணைக்கப்பட்டுள்ளன.

எனது மனு குறித்து உரிய நடவடிக்கை எடுத்து, எனக்கு உரிய தகவல் தெரிவிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்."

09.08.2026 நாளிட்ட மனு

நான் இந்த முறைமன்றத்தில் பதிவு செய்த முறையீட்டு மனு மீது இன்று வரை நடவடிக்கை எடுக்காதது குறித்து மிகுந்த மன வேதனை அடைகிறேன்.

சித்திரை திருவிழா கொண்டாட முடியவில்லை தயவு செய்து, "ஆடி பண்டிகைக்குள்" ஆக்கிரமிப்பை அகற்றி தருமாறு தங்களுக்கு இரண்டாவது நினைவூட்டல் கடிதம் 30.05.2026 அன்று அனுப்பி இருந்தோம்.

தமிழகத்தின் உச்ச அதிகாரம் கொண்ட இந்த முறைமன்றத்தை எனது மனுவில் கூறிய இடத்தை அதிகாரிகளை நேரில் கள ஆய்வு செய்து திட்ட அனுமதி வரை படத்தினை மீறிய ஆக்கிரமிப்பினை அகற்றி எங்கள் இன மக்கள் குலதெய்வம் "வீரமாத்தியம்மன்" கோயிலுக்கு உயிர் பயம் இன்றி சென்று வர ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விஷயத்தில் தாமதம் ஏற்படாமல் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்."

2. மனுதாரரின் 02.03.2026 நாளிட்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 10.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 02.09.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.08.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இரண்டாம் எதிர்மனுதாரர்களில் திருமதி சுந்தரிசுப்பிரமணியம் என்பவர் தன்னுடைய 27.08.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"எனக்கு 70 வயது ஆகிறது. வயது முதிர்வு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக என்னால் தங்களது விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலாத சூழ்நிலை உள்ளதால், இந்த எழுத்துபூர்வமான விளக்கத்தை சமர்ப்பிக்கிறேன். எதிர்மனுதாரர் அளித்துள்ள புகாரானது முற்றிலும் பொய்யானது. உள்நோக்கம் கொண்டது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்."

விளக்கங்கள்:

நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது:

புகார்தாரர் குறிப்பிட்டுள்ள இதே சொத்து சம்பந்தமாக ஏற்கனவே கோவை மாவட்ட சிவில் நீதிமன்றத்தில் (District Court) வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. (நீதிமன்ற வழக்கு எண் O.S. No.135/2025).

மாநகராட்சி அதிகாரிகளின் கூட்டு:

மாநகராட்சி அதிகாரிகள் தனியார் பாதையில் விதிமீறி பாதாள சாக்கடை அமைத்துள்ளனர். இதற்கு புகார்தாரர், மாநகராட்சியும் கூட்டு சேர்ந்துள்ளனர். எங்களிடம் பாதாள சாக்கடை திட்டத்திற்காக கட்டாயப்படுத்தி கையெழுத்து வாங்குவதற்காகவே இத்தனை வருட பழைய வீட்டிற்கு அப்ரூவல் இல்லை. ரிசர்வ் சைட் போன்ற பொய்யான புகார்களை ஜோடித்துள்ளனர்.

ஒரே நாளில் இரண்டு விசாரணை:

வருகிற 2–ம் தேதி கோவை மாவட்ட நீதிமன்றத்திலும் எதிர்மனுதாரர் என் மீது போட்ட பொய் வழக்கு O.S. No.510/2025 வழக்கின் விசாரணை (Hearing) உள்ளது. அதே நாளில் தங்களது அலுவலகத்திலும் விசாரணை வைக்கப்பட்டுள்ளது. 70 வயதான என்னால் ஒரே நாளில் இரு இடங்களுக்குச் செல்ல முடியாது.

கோரிக்கை:

எனவே, நீதிமன்றத்தில் (O.S. No.135/2025) நிலுவையில் உள்ள வழக்கை மறைத்து, தவறான தகவல்களை தந்து, தங்களை திசை திருப்பும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒரு தாழ்மையான கோரிக்கை 295 C 2023 உள்ளாட்சி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் கோவை மாநகராட்சியால் எதிர்மனுதாரருக்கு 11.4.2025 நான்கு புறமும் ஆக்கிரமித்த கட்டிய மதில் சுவர் 15 நாளில் அகற்ற அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு அகற்றாமல் இருக்க எதிர்மனுதாரரும், அவர் மனைவி ஆனந்தியும் கீழ் நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகளை போட்டுள்ளனர்.

1. O.S. No.510/2025, 2. O.S. No.135/2025 இந்த இரண்டு வழக்கிலும் பிரதிவாதியாக கோவை மாநகராட்சி ஆணையர் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆனால் மாநகராட்சி அதிகாரிகள் இந்த வழக்கை எதிர்மனுதாரருக்கும், அவர் மனைவி ஆனந்திக்கும் சாதகமாக செய்யும் பொருட்டு நீதிமன்றத்தில் ஒரு வழக்குக்கு O.S. No.510/2025, வழக்குக்கு நீதிமன்றத்திற்கு ஆரம்பத்தில் இருந்தே வராமலும் மற்றொரு வழக்கிற்கு O.S. No.348/2025 அந்த வழக்கில் ஆனந்திக்கு இடைக்கால உத்தரவு வாங்கும் வரை வந்து விட்டு பிறகு EX-PARTY ஆகி உள்ளனர். இதனால் நீதியை நிலைநாட்டும் பொருட்டு இந்த இரண்டு வழக்கிற்கும் மாநகராட்சி வழக்கறிஞரை

நீதிமன்றத்திற்கு வந்து உண்மைகளை கூறி நீதியை நிலை நாட்ட வேண்டுகிறேன். அதற்கு கோவை மாநகராட்சி அதிகாரிகளுக்கு தாங்கள் உத்தரவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் 295 C 2023 தீர்ப்பில் கூறி உள்ளப்படி தனியாரிடத்தில் கோவை மாநகராட்சியால் போடப்பட்ட பாதாள சாக்கடை இன்னும் மாநகராட்சி அதிகாரிகள் அகற்றவில்லை. இதனால் அங்கு இருப்போர் அவர்களே குழி தோண்டி பாதாள சாக்கடையில் இணைப்பு சட்டவிரோதமாக கொடுத்துக் கொள்கிறார்கள்.

இதனை எல்லாம் நாங்கள் கேட்பதால் எங்கள் மீது பொய் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் கோவையில் நான் தனியாக உள்ளேன். எதிர்மனுதாரரின் தூண்டுதலின் பேரில் மாநகராட்சி அதிகாரிகள் தினமும் வந்து வீட்டை அளப்பது வீட்டிற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது பற்றி எல்லாம் கள ஆய்வுசெய்து கொண்டு தான் இருக்கிறார்கள். கோவை மாநகராட்சி அதிகாரிகளுக்கே தெரியும். தரைதளம், முதல் தளம் மட்டுமே உள்ளது. அதுவும் எந்த ஒரு சட்ட விதிமுறைகளும் மீறவில்லை. சட்டப்படி தான் கட்டப்பட்டுள்ளது என்றும், எந்த ஒரு வரி ஏய்ப்பும் செய்யவில்லை என்றும் முறைப்படி கட்டிய வீட்டின் கட்டிடத்திற்கு சொத்துவரி செலுத்தி வருகிறேன் என்றும், கோவை மாநகராட்சியில் உள்ள அனைத்து துறை அதிகாரிகளும் வந்து களஆய்வு செய்து உள்ளனர். அதனால் வாதி பொய் புகார் கூறியுள்ளார் என்று கோவை மாநகராட்சி அதிகாரிகள் அனைவருக்குமே தெரியும்.

நான் எந்த ஒரு சட்ட விதிமீறலும் செய்யவில்லை. என் கணவருக்கு வந்த குடும்ப பாகப்பிரிவினையில் என் கணவர் பாகத்தில் என் கணவரால் கட்டிய வீட்டிற்கு முறையாக கோவை மாநகராட்சியிடம் முறையாக அனுமதி வாங்கி முறையாக சொத்துவரி கட்டி வருகிறேன்.

எந்த கோவில் நிலத்தையும், மாநகராட்சி இடத்தையும் ஆக்கிரமித்து கட்டவில்லை. நான் எந்த சட்ட விதிமுறைகளையும் மீறவில்லை.

நான் எந்த உண்மைகளையும் மறைக்கவில்லை. நான் சட்டப்படி நடப்பது பிடிக்கவில்லை. அதனால் எதிர்மனுதாருக்கும் கோவை மாநகராட்சி அதிகாரிகளுக்கும் அவர்கள் செய்த சட்டவிரோத செயலுக்கு என் மீது பழி போடுகிறார்கள் நான் இதை சட்டப்படி எதிர்கொள்வேன்.

கோரிக்கை:

எனவே, நீதிமன்றத்தில் (O.S. No.135/2025) சொத்து வழக்கு விசாரணை நிலுவையில் உள்ள வழக்கை மறைத்து, தவறான தகவல்களை தந்து, தங்களை திசைதிருப்பும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

5. இந்நிலையில்,இரண்டாம் எதிர்மனுதாரர்களான திருமதி சுந்தரி, திருமதி திலகவதி மற்றும் திருமதி கவிதா ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் ஆஜராக தேவையில்லை என இம்முறைமன்ற நடுவம் 31.08.2026 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

6. கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் உதவி ஆணையாளர் தனது 31.08.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 2202/2026/H1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

''மனுதாரர் அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவில்லை எனவும் பல முறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள் என தெரிவித்துள்ளார்.

மேற்படி மனைப்பிரிவு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு ஒப்புதல் பெறப்பட்ட கோப்புகள் ஏதும் இம்மாநகராட்சி அலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை. மனைப்பிரிவு கோப்புகள் இறுதி ஒப்புதலுக்காக பிரதான அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அந்த நிலையில், அங்குள்ள பதிவுரு அவையில் தேடியும் கிடைக்கப் பெறவில்லை. மேலும் மேற்படி மனைப்பிரிவு ஒப்புதல் பெறப்பட்ட படி வருவாய்த் துறையால் உட்பிரிவு செய்யப்படாமல் முழு புல எண்களாகவே தற்பொழுதும் இருந்து வருகிறது. எனவே மேற்படி மனுதாரர் குறிப்பிடும் இடம் ஆக்கிரமிப்பில் உள்ளதா இல்லையா என்பதை அளவீடு செய்ய இயலவில்லை. மேலும் மேற்படி புகார் மனுதாரர் தெரிவித்துள்ளபடி கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் உறுப்பினர் / செயலர் அவர்களால் 106–அ–2000 என திட்ட அனுமதி வழங்கப்பட்டு Revised Plan "Group Housing Scheme" என கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் உதவி நகர திட்ட அலுவலர் அவர்களால் 07/09/2001 தேதியில் C.A. No. 17/2001/H1, BL No.40/2001/H2, Dt. 30/03/2001 P.A. No.144/2000/H2 என அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். அவ்வாறு அனுமதிக்கப்பட்டு இருந்தால் மண்டல அலுவலகம் மூலம் பரிந்துரைக்கப்பட்டு இறுதி ஒப்புதல் வேண்டி கோப்பு பிரதான அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதால் மேற்படி கோப்பு கிடைக்கப் பெறவில்லை. எனவே மேற்படி அனுமதிக்கப்பட்ட வரைபடங்கள் இருப்பின் சமர்ப்பிக்க வேண்டி மனுதாரரிடம் பல முறை நேரில் கேட்டும் அவர் சமர்ப்பிக்காமல் நடவடிக்கை மட்டும் எடுக்க வேண்டி பல முறை புகார் மனு மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுக்கள் மட்டுமே சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்கள் ஒப்புதல் பெற்ற வரைபடத்தின்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை அரசாணை எண் 222 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28/08/1992–ன்படி ஒப்படைக்க வேண்டும். ஆனால் மேற்படியாளர்கள் ஒப்படைப்பு செய்யவில்லை.

எனவே அவர்கள் மீது நடவடிக்கை தொடர முன்னெடுப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு வரைபட நகல் வேண்டி நகர் ஊரமைப்பு துறை அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டு நிலுவையில் உள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது). இந்நிலை மேற்படி மனைப்பிரிவில் வசிப்பவர்களிடம் மனைப்பிரிவின் வரைபடம் உள்ளதா என ஆய்ந்து 13/07/2026அன்று ஒரு வீட்டின் உரிமையாளரிடம் மனைப்பிரிவு வரைபடம் பெறப்பட்டு அதன்படி அளவீடு செய்து பார்த்ததில் திருமதி சுந்தரி க/பெ சுப்பிரமணியன் என்பவர் அவரது வீட்டிற்கு வடபுறம் கோவிலுக்கு தென்புறம் சிலாப் சுற்றுச் சுவர் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பது உறுதி செய்யப்பட்டு தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம் பிரிவு 128–ன் கீழ் அறிவிப்பு வழங்கி நடவடிக்கையில் உள்ளது என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மேற்படி நபர் தரைதளம் மற்றும் முதல் தளம் ஆகிய இரண்டு தளங்கள் அனுமதி அளிக்கப்பட்ட வரைப்படத்தின் படி கட்டியுள்ளார். இருப்பினும் கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெற்ற ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டி தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 133, 135–ன்படி அறிவிப்பு வழங்கி நடவடிக்கையில் உள்ளது.

மேலும் பட்டா மாறுதல் மற்றும் நகரளவை ஆவணங்களில் உட்பிரிவு செய்தல் போன்ற பணிகள் புகார் மனுதாரர் குறிப்பிடுவது போல் மாநகராட்சியால் செய்ய இயலாது. மாறாக மேற்படி பணிகள் வருவாய்த் துறையால் செய்யப்பட வேண்டியவை என்பதை தங்களின் கவனத்திற்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் இனிவரும் காலங்களில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு புகாருக்கு இடமளிக்காமல் பணிகளை முடிக்க உறுதி அளித்து பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது."

7. 02.09.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் 31.08.2026 நாளிட்டு அளித்த எழுத்துபூர்வ வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:–

"சொத்தின் முகவரி: கதவு எண் 7E, ஸ்ரீநகர் ஸ்ட்ரீட் எண்–4, ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி எஸ்டேட்ஸ், ரைட் ஹவுஸ், முல்லை நகர், தெலுங்குபாளையம் கிராமம், பாப்பநாயக்கன் புதூர் அஞ்சல், கோயம்புத்தூர்–641 041 (வார்டு எண் 041), சர்வே எண் 354, 351, 359 (பகுதி).

"ஸ்ரீராஜ ராஜேஸ்வரி எஸ்டேட்ஸ்"

முக்கிய அம்சங்கள்:

(1) இந்த லே–அவுட் (Layout) அரசு விதிமுறைகளை பின்பற்றவில்லை. இதற்கு வழங்கப்பட்டுள்ள லே–அவுட் ஒப்புதல் எண் LPA 106/2000, சாலை ஒப்படைப்பு, ரிசர்வ் சைட் ஒப்படைப்பு, கட்டிட விதிகள் – இவை எதுவும் சரியாக பின்பற்றப்படவில்லை. லே–அவுட் சாலை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ரிசர்வ் சைட் தொடர்பான ஆவணங்களும் கோயில் நிலம் தொடர்பான ஆவணங்களும் சரிபார்க்கப்பட வேண்டும். இவை அனைத்தையும் வைத்துப் பார்த்தால், இந்த லே–அவுட் ஒப்புதலே (LPA 106/2000) சட்டவிரோதமானது என்பது தெளிவாகிறது இதை ரத்து செய்ய வேண்டும்.

(2) இப்போது இந்த லே–அவுட்–ன் ரிசர்வ் சைட் மற்றும் லே அவுட் சாலைகளில் நேரடியாக என்ன கட்டப்பட்டுள்ளது என்பதை, ஒப்புதல் பெற்ற லே–அவுட் வரைபடத்துடன் ஒப்பிட்டு நேரில் சரிபார்க்க வேண்டும்.

(3) ரிசர்வ் சைட் மீது கட்டப்பட்ட இந்த கட்டிடத்திற்கு தண்ணீர் இணைப்பு, மின் இணைப்பு, சொத்து வரி மதிப்பீடு – எல்லாமே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சொத்து வரி மதிப்பீடு கீழ்தளத்திற்கு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. முதல் தளம், இரண்டாம் தளம் ஆகியவற்றிக்கு இதுவரை வரியே விதிக்கப்படவில்லை. இதனால் அரசுக்கு பெரிய அளவில் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(4) மாநகராட்சியின் சொந்த சொத்துவரி இணையதளத்திலேயே, இந்த கட்டிடத்திற்கு எந்த திட்ட ஒப்புதலும் (Plan Approval) இல்லை என தெளிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மாநகராட்சியின் சொந்த பதிவேட்டிலிருந்தே கிடைக்கும் ஆதாரம்.

(5) இந்த நிலம் கோயிலுக்கு ஒதுக்கப்பட்ட ரிசர்வ் சைட் என்பதாலேயே, இதற்கு திட்ட ஒப்புதல் வழங்கப்படவில்லை என்பது புரிகிறது. அதாவது, இந்த நிலத்தின் மீது கட்டுமானமே அனுமதிக்கக்கூடாது என்பதால் தான் ஒப்புதல் மறுக்கப்பட்டது.

(6) ஆனால், மாநகராட்சி அலுவலகத்தில் ஒப்புதல் இல்லை ("Is Plan Approve : NO ") என பதிவாகியிருந்தும், இந்த கட்டுமானம் இன்று வரை அப்படியே நிற்கிறது. எந்த நடவடிக்கையும் இல்லை. இதிலிருந்து தெரிவது என்னவெனில், இதில் தொடர்புடைய எல்லா துறை அதிகாரிகளும் ஏதோ ஒரு லாபத்திற்காகவே இதை கண்டுகொள்ளாமல் விட்டிருக்கிறார்கள் என்பதே.

(7) லே–அவுட் சாலையும், கோயிலுக்குச் செல்லும் பாதையும் ஆக்கிமிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏதேனும் அவசர சூழ்நிலையில் (உதாரணமாக ஆம்புலன்ஸ் வர வேண்டி நேரத்தில்) இந்த பகுதிக்குள் எப்படி வாகனம் செல்ல முடியும் என்பது என் கேள்வி.

(8) எனக்கு இருக்கும் சந்தேகம்: 2000–ம் ஆண்டு தளவமைப்பு (Lay Out) ஒப்புதல் (LPA 106/2000) பெறப்பட்டது. அப்படியிருக்க, இதே ரிசர்வ் சைட் நிலம் 2004–ல் ஒரு உயிலில் (Will) எப்படி எழுதி வைக்கப்பட்டது. மேலும் 2008–ல் இன்னொரு ஆவணத்தில்

(தானசெட்டில்மெண்ட்) எப்படி மீண்டும் தனிநபர் பெயரில் பதிவானது? ரிசர்வ் சைட் என்றால் அது பொதுச் சொத்து; அதை ஒரு தனி நபர் தன் உயிலில் தன் சொத்தாக எழுத முடியுமா? இது வெறும் காகிதத்தில் மட்டும் இல்லை – இந்த ரிசர்வ் சைட் இடத்திலேயே சுந்தரி அம்மையார் இன்றும் வசித்து வருகிறார் என்பதை வழக்கு ஆவணங்களே உறுதி செய்கின்றன. அதாவது, பொதுமக்களுக்கு சொந்தமான இடத்திலேயே ஒருவர் வசிப்பிடமாக்கிக் கொண்டிருக்கிறார்.

(9) கோயில் நிலம் 2008–ல் ஒரு தனிநபர் பெயரில் எப்படி ஆவணப்படுத்தப்பட்டது? இது எப்படி சாத்தியமானது என்பதை மாநகராட்சி விளக்க வேண்டும்.

(10) இத்தனை ஆண்டுகளாக இந்த ஒப்புதல் இல்லாத கட்டுமானத்தின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை; RTI, புகார் மனு மற்றும் முதல்வரின் முகவரி என கடந்த இரண்டு ஆண்டுகள் அனுப்பியும் எந்த பயனும் இல்லை. அனைத்து அதிகாரிகளும் சுந்தரிக்கு சாதகமாகவே மழுப்பலான பதில் அளிக்கின்றனர்.

(11) மேலும் ஒரு முக்கியமான விஷயம் – இந்த லே–அவுட்டை Google Map–ல் கூட தெளிவாக பார்க்க முடியாதபடி மறைத்து வைத்திருக்கிறார்கள். ஒரு சட்டப்படியான, சரியான ஒப்புதலுடன் கூடிய லே–அவுட் என்றால் அதை யாரும் மறைக்க வேண்டிய அவசியமே இல்லை. இதை பொது பார்வையிலிருந்து வேண்டுமென்றே மறைத்து வைத்திருப்பதே. இதில் ஏதோ பெரிய தவறு / மோசடி இருப்பதற்கான இன்னொரு அறிகுறி. இதனுடன், மேல்தளங்களுக்கு வரி விதிக்காமல் இருப்பதன் மூலம் மாநகராட்சிக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பும் சாதாரணமானது அல்ல. இது ஆண்டுக் கணக்கில் தொடர்ந்து வரும் பெரிய அளவிலான பொது நிதி இழப்பு.

(12) எனது RTI, புகார் மனு மற்றும் முதல்வரின் முகவரி விண்ணப்பங்களுக்கும் புகார்களுக்கும் இன்று வரை உரிய பதிலோ நடவடிக்கையோ கிடைக்கவில்லை. கோயம்புத்தூர் மாநகராட்சி அதிகாரிகள், திலகவதி என்ற பெயரையே கேட்டதும் பயந்து பின்வாங்குவது போல் எனக்கு தோன்றுகிறது. இது எனக்கு ஒரு தீவிரமான கேள்வியை எழுப்புகிறது – இந்த அதிகாரிகள் பொதுமக்களின் நலனுக்காக பணிபுரிகிறார்களா, அல்லது ஒரு குறிப்பிட்ட நபரான சுந்தரி அம்மையாரின் நலனுக்காக பணிபுரிகிறார்களா என்று, இதை இம்முறைமன்ற நடுவமே தெளிவுபடுத்த வேண்டும்.

மேலே சொன்ன ஒவ்வொரு அம்சத்தையும் தனித்தனியாக பார்த்தால் – ஒப்புதல் இல்லாத கட்டுமானம், ரிசர்வ் சைட் தனிநபர் பெயரில் மாறியது. மேல்தளங்களுக்கு வரி விதிக்காதது, ஒப்புதல் சரிபார்க்காமல் மின்/தண்ணீர் இணைப்பு கொடுத்தது, RTI கேள்விகளுக்கு பதில் இல்லாதது – இவை அனைத்தும் தனித்தனி தவறுகள் அல்ல. இவை ஒன்றாக சேர்த்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளே இந்த சட்டவிரோத கட்டுமானத்திற்கு முக்கிய உதவியாக இருந்திருக்கிறார்கள் என்பதே. எந்த ஒரு தனிநபராலும் இத்தனை துறைகளில் (லே–அவுட் (LPA), கட்டிட ஒப்புதல், சொத்துவரி, மின்சாரம், தண்ணீர்) இவ்வளவு காலமாக விதிமீறி தொடர்ந்து செயல்பட முடியாது – அதிகாரிகளின் உதவியும் மௌன ஒப்புதலும் இல்லாமல் இது சாத்தியமே இல்லை. எனவே, இதை வெறும் கட்டுமான மீறலாக மட்டும் பாராமல், அதிகாரிகளின் பங்கு குறித்தும் தீவிரமாக விசாரிக்க வேண்டும் என பணிவுடன் வலியுறுத்துகிறேன்.

இது தொடர்பாக ஒரு விஷயத்தை தெளிவாக தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், 2014–ன் கீழ் இம்முறைமன்ற நடுவத்திற்கு உள்ள அதிகாரம், பொதுப் பணியாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மீது மட்டுமே செயல்படக்கூடியது; தனிநபர்கள் மீது நேரடியாக தண்டனை வழங்கும் அதிகாரம் இச்சட்டத்தின் கீழ் இல்லை என்பது எனக்கு புரிகிறது. அதனால் தான், சுந்தரி / திலகவதி / கவிதா ஆகியோர் மீது நேரடியாக நடவடிக்கை கோராமல், அவர்களது ஒப்புதலற்ற

கட்டுமானத்தை இத்தனை ஆண்டுகளாக பாதுகாத்து, அதற்கு சாதகமாக செயல்பட்ட மேற்கு மண்டல அலுவலர்கள் மீதே நான் கவனம் செலுத்துமாறு கோருகிறேன். இந்த குறிப்பிட்ட சொத்திற்கு மட்டும் இத்தனை விதிவிலக்குகள் (ஒப்புதல் இல்லாமலேயே கட்டுமானம் தொடர அனுமதி, மேல்தளங்களுக்கு வரி விதிக்காமை, இணைப்புகள் வழங்கியது) கிடைத்திருப்பது எந்த அலுவலரின் முடிவால் என்பதை பெயர் வாரியாக கண்டறிந்து, அவர்கள் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கோருகிறேன்.

(இந்த சொத்தின் மீது யாருக்கு உரிமை உண்டு என்ற கேள்வி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் (O.S. No.135/2025) தனியாக நிலுவையில் உள்ளது அது தொடர்பாக இங்கு நான் எந்த நிலைப்பாடும் எடுக்கவில்லை. மேலே சொன்ன அனைத்தும் – ஒப்புதலில்லா கட்டுமானம், வரி இழப்பு, ஒப்புதல் சரிபார்க்காமல் இணைப்பு வழங்கியது – இவை உரிமையாளர் யார் என்பதைப் பொறுத்து மாறாத, தனியான உண்மைகள்)

வேண்டுகோள்கள்:

(அ) இந்த இடத்தில் உடனடியாக நேரில் ஆய்வு (site inspection) மேற்கொண்டு, ஒப்புதல் இல்லாத கட்டுமானத்தை அகற்ற எதிர்மனுதாரர் 2–க்கு (சுந்தரி, திலகவதி, கவிதா) இறுதி நோட்டீஸ் கொடுக்க வேண்டும்;

(ஆ) தளவமைப்பு தளவமைப்பு (Lay Out) ஒப்புதலான LPA எண் 106/2000–ஐ, அசல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்துடன் ஒப்பிட்டு சரிபார்த்து, மேலே சொன்ன மீறல்கள் உறுதியானால் அதை ரத்து செய்ய வேண்டும்;

(இ) "ஸ்ரீராஜ ராஜேஸ்வரி எஸ்டேட்ஸ்" எனும் ஒப்புதல் பெற்ற தளவமைப்பில், சர்வே எண் 354 (பகுதி), 355 (பகுதி) மற்றும் 359 (பகுதி), தெலுங்குபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள ரிசர்வ் சைட் (Open Space Reservation) மற்றும் பொது சாலைகள் மீது அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் மற்றும் ஒப்புதலற்ற கட்டுமானங்களை அகற்றுமாறு எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டும். மேலும் கோயிலுக்குச் செல்லும் பொதுப் பாதையும் இதன் மூலமே மீட்டெடுக்கப்பட வேண்டும்;

(ஈ) இதுவரை நடவடிக்கை எடுக்காமல் இருந்த மேற்கு மண்டல அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த குறிப்பிட்ட சொத்திற்கு மட்டும் (ஒப்புதல் இல்லாமலேயே கட்டுமானம் தொடர அனுமதி, மேல்தளங்களுக்கு வரி விதிக்காமை, ஒப்புதல் சரிபார்க்காமல் மின் / தண்ணீர் இணைப்பு), இத்தனை விதிவிலக்குகள் யாருடைய முடிவால் கிடைத்தன என்பதை பெயர் வாரியாக கண்டறிந்து, சுந்தரி / திலகவதி / கவிதா ஆகியோர் தரப்பிற்கு சாதகமாக செயல்பட்ட அலுவலர்கள் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்;

(உ) தவறவிடப்பட்ட முதல் / இரண்டாம் தளங்களுக்கான சொத்து வரியை விதிக்காத அதிகாரிகள் மீதும்; இதற்குப் பொறுப்பானவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்;

(ஊ) ஒப்புதல் இல்லாத இந்த கட்டுமானத்திற்கு மின், தண்ணீர் இணைப்பு எப்படி கொடுக்கப்பட்டது என்பதை சம்பந்தப்பட்ட துறைகள் விளக்கமளிக்க வேண்டும்; இனிமேல் இது போன்ற தவறு நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்;

(எ) 2004 உயில் மற்றும் 2008 ஆவணத்தில் இந்த ரிசர்வ் சைட் / கோயில் நிலம் தனிநபர் பெயரில் எப்படி பதிவானது என்பதை பதிவுத் துறையும், மாநகராட்சியும் இணைந்து விளக்கமளிக்க வேண்டும்;

(ஏ) மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளுக்கு உதவிய அனைத்து அதிகாரிகளையும், அறிக்கை இம்முறைமன்ற நடுவம் தண்டிக்க வேண்டும்;

(ஐ) இது தொடர்பாக பொருத்தமான பிற உத்தரவுகளையும் பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

மதிப்பிற்குரிய ஐயா, மக்களைக் காக்க வேண்டிய கடமை கொண்ட அதிகாரிகள், மக்களுக்கு தெய்வத்திற்கு நிகரானவர்கள். ஆனால் அவர்களில் சிலர், அந்த நம்பிக்கையை பாதுகாக்காமல், ஊழலுக்கு துணைபோய், ரிசர்வ் சைட்டில் கட்டியுள்ள கட்டுமானங்களை பாதுகாத்து, பொது மக்களின் பாதையையும் கோவில் நிலம் மற்றும் கோவில் செல்லும் பாதையையும் மாநகராட்சியின் வருவாயையும் பறித்துள்ளனர். இந்த தேவைகளையும் தெய்வங்களுக்கெல்லாம் காக்கும் தெய்வமாக செயல்பட வேண்டியது இம்முறைமன்ற நடுவமே. இப்படிப்பட்ட ஊழலுக்கு துணைபோன அதிகாரிகளுக்கு உரிய தண்டனை வழங்கி, இனிமேல் இது போன்ற மோசடி மீண்டும் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என, மிகுந்து வேதனையுடன் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான், 02.09.2026 விசாரணையில் நேரில் ஆஜராகி, மேற்கண்ட விவரங்களை ஆவணச் சான்றுகளுடன் விளக்குவதற்கு தயாராக இருக்கிறேன்.''

8. மனுதாரர் 02.09.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''எனது பாட்டனார் திரு.மாரிமுத்து நாயக்கருக்கு 1954–ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலமாக வந்த சொத்தில் ஒரு பகுதியை மனைப்பிரிவுகளாக பிரித்து அதற்கு ''ஸ்ரீ ராஜராஜேஸ்வரி எஸ்டேட்'' என்று பெயரிட்டு கோயம்புத்தூர், கோயமுத்தூர் உள்ளூர் திட்ட குழுமம், உறுப்பினர் செயலர் 106 அ/2000, என எண்ணிட்ட திட்ட அனுமதி வழங்கப்பட்டு, அதன் பின் Revised plan. "Group Housing scheme" in SF No:354 Part, 355/1 Part and 359 Part of Telegupalayam Village, Coimbatore Corporation LPA No:865 Dt 12.10.2000, கோயம்புத்தூர் கார்ப்பரேஷன், மேற்கு மண்டலம், உதவி நகர திட்ட அலுவலர் அவர்களால் 07.09.2001 தேதியில் C.A. No.17/2001/H1, B.L. No.40/2001/H2 (dated 30.03.2001) P.A. No.144/2000/H2ல் அங்கீகாரம் பெறப்பட்டது.

மனை பிரிவு அங்கீகாரத்தில் எங்களின் அஸ்தாந்தர கொள்ள நாயக்கர் குல தெய்வம் ''வீரமாத்தி அம்மன்'' மரத்தின் அடியில் இருந்தது. எனவே மரம் மற்றும் அதன் சுற்று பகுதியை நாங்கள் ரிசர்வ் சைட் ஆக கூறி (காட்டி) திட்ட அனுமதி பெற்றிருக்கிறோம். இந்த திட்ட அனுமதியில் மொத்தம் 2 ஏக்கர் 67 சென்ட் இடத்தில் 23 சென்ட் கோவிலுக்கு ஆக ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

லே–அவுட் பிரித்தால் அதிலுள்ள பாதை மற்றும் ரிசர்வ் சைட்டை மாநகராட்சிக்கு கொடுக்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கும்பொழுது, எங்களது பவர்ஏஜெண்டும் மாநகராட்சி அதிகாரிகளும் திருமதி சுந்தரி, திலகவதி, கவிதா அனைவரும் கூட்டுச்சதி செய்து அரசாங்கத்திற்கு பாதை மற்றும் ரிசர்வ் சைட்டை தானமாக கொடுக்காமல் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். இதனால் கோவில் நிகழ்வுகளில் கூட்ட நெரிசல் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் மேற்கண்ட இடத்தில் திருமதி. சுந்தரி மற்றும் சிலர் அவ்விடத்தில் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் 3 தளம் கட்டியுள்ளது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் முதல் தளத்திற்கு மட்டும் சொத்துவரி விதிக்கப்பட்டு செலுத்தி வரப்படுகிறது மற்றும் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கு சொத்து வரி செலுத்தப்படாமல் உள்ளது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மேற்கண்ட மனை பிரிவு தொடர்பாக பின்வரும் விவரங்கள்:-

1) வரைப்பட அனுமதி நகல்அளிக்கும்படியும்,
2) பொதுபாதை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா,
3) கோவில் இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா,
4) கட்டிட அனுமதி அங்கீகாரத்திற்கு கூடுதலாக கட்டிய கட்டுமானத்திற்கு,

ஏதேனும் அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா – ஆகியவற்றை எனக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் வழங்க அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட சொத்தின் மீது யாருக்கு உரிமை உண்டு என்ற கேள்வி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No.135/2025 நிலுவையில் உள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.''

9. எதிர்மனுதாரரான கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையாளர் தரப்பில் உதவி நகர திட்டமிடுநர் 02.09.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள கோயம்புத்தூர் தெலுங்கு பாளையம் கிராமத்தில் SF 354, 355/1,மற்றும் 359ல் அடங்கியுள்ள நிலத்தை ஸ்ரீராஜராஜேஸ்வரி எஸ்டேட்ஸ் என மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுத்தால் 106 அ/2000 என திட்ட அனுமதி வழங்கப்பட்ட கோப்பு மற்றும் Revised Plan கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் உதவி திட்ட அலுவலரால் 07.09.2001 தேதியிட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் வரைப்பட அனுமதிபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் அவ்வாறு மனுதாரரால் ஒப்படைக்கப்படவில்லை.

மேற்கண்ட மனை பிரிவில் உள்ள ஒருவரிடம் மனைபிரிவு வரைப்பட நகல் பெறப்பட்டது அடிப்படையில் அளவீடு செய்ததில் திருமதி. சுந்தரி, க/பெ.திரு.சுப்ரமணியன் வீட்டிற்கு வடபுறம் மற்றும் தென்புறம் சுற்றுசுவர் கட்டி ஆக்கிரமித்துள்ளது கண்டறியப்பட்டது. எனவே தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம் 128–ன்படி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் கட்டிட அனுமதி பெற்ற ஆவணங்களை சமர்ப்பிக்க கோரி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133, 135–ன்படி அறிவிப்பு படிவம் 1 வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக படிவம் 2 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு அளிக்கப்பட்டு உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மனுதாரர் குறிப்பிட்ட வரைப்பட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டு இருப்பின் அது குறித்தும் உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட கட்டிடத்திற்கு மனுதாரர் தெரிவித்ததற்கு மாறாக தரைதளம் மற்றும் முதல் தளத்திற்கு சொத்துவரி விதிக்கப்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தினையும் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

10. மனுதாரரின் முறையீட்டு மனு, எழுத்துபூர்வமான வாக்குமூலம், வாக்குமூலம், எதிர்மனுதாரரான கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி நகர திட்டமிடுநரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள தனது பாட்டனார் திரு.மாரிமுத்து நாயக்கருக்கு 1954-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலமாக வந்த சொத்தில் ஒரு பகுதியை மனைப்பிரிவுகளாக பிரித்து அதற்கு "ஸ்ரீ ராஜராஜேஸ்வரி எஸ்டேட்" என்று பெயரிட்டு கோயம்புத்தூர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம், உறுப்பினர் செயலர் 106 அ/2000, என எண்ணிட்ட திட்ட அனுமதி வழங்கப்பட்டு, பின்பு Revised plan செய்யப்பட்டு C.A. No.17/2001/H1, B.L. No.40/2001/H2 (dated 30.03.2001) P.A. No.144/2000/H2ல் அங்கீகாரம் பெறப்பட்டது என்பதும், அம்மனைப்பிரிவில் மனுதாரரின் அஸ்தாந்தர கொள்ள நாயக்கர் குல தெய்வம் "வீரமாத்தி அம்மன்" மரத்தின் அடியில் இருந்தால் அந்த இடம் மற்றும் அதன் சுற்று பகுதியை ரிசர்வ் சைட் ஆக திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், அத்திட்ட அனுமதியில் மொத்தம் 2 ஏக்கர் 67 சென்ட் இடத்தில் 23 சென்ட் கோவிலுக்காக ஆக ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது என்பதும், லே-அவுட் பிரித்தால் அதிலுள்ள பாதை மற்றும் ரிசர்வ் சைட்டை மாநகராட்சிக்கு கொடுக்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கும்பொழுது, மனுதாரரின் பவர்ஏஜெண்டும் மாநகராட்சி அதிகாரிகளும் திருமதி சுந்தரி, திலகவதி, கவிதா அனைவரும் அரசாங்கத்திற்கு பாதை மற்றும் ரிசர்வ் சைட்டை தானமாக கொடுக்காமல் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பதும், இதனால் கோவில் நிகழ்வுகளில் கூட்ட நெரிசல் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதும், மேற்கண்ட இடத்தில் திருமதி. சுந்தரி மற்றும் சிலர் அவ்விடத்தில் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் 3 தளம் கொண்ட கட்டிடம் கட்டியுள்ளது தொடர்பாகவும், முதல் தளத்திற்கு மட்டும் சொத்துவரி விதிக்கப்பட்டு செலுத்தப்பட்டு வந்தாலும், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்திற்கு சொத்து வரி செலுத்தப்படாமல் உள்ளது தொடர்பாகவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறும், மேலும், மேற்கண்ட மனை பிரிவு தொடர்பாக வரைப்பட அனுமதி நகல்அளிக்கும்படியும், பொதுபாதை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா, கோவில் இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா, கட்டிட அனுமதி அங்கீகாரத்திற்கு கூடுதலாக கட்டிய கட்டுமானத்திற்கு ஏதேனும் அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ஆகியவை தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மனுதாரருக்கு வழங்க அறிவுறுத்துமாறும், மேற்கண்ட சொத்தின் மீது யாருக்கு உரிமை உண்டு என்ற கேள்வி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No.135/2025 நிலுவையில் உள்ளது என்பதும் மனுதாரர் மனு, எழுத்துபூர்வமான வாக்குமூலம் மற்றும் விசாரணையில் அளித்த வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கோயம்புத்தூர் தெலுங்கு பாளையம் கிராமத்தில் SF 354, 355/1,மற்றும் 359ல் அடங்கியுள்ள நிலத்தை ஸ்ரீராஜராஜேஸ்வரி என மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுத்தால் 106 அ/2000 என திட்ட அனுமதி வழங்கப்பட்ட கோப்பு மற்றும் Revised Plan கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் உதவி திட்ட அலுவலரால் 07.09.2001 தேதியிட்டு வழங்கப்பட்டுள்ளது என்பதும், வரைப்பட அனுமதிபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதும், ஆனால் அவ்வாறு மனுதாரரால் ஒப்படைக்கப்படவில்லை என்பதும், மேற்கண்ட மனை பிரிவில் உள்ள ஒருவரிடம் மனைபிரிவு வரைப்பட நகல் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் அளவீடு செய்ததில் திருமதி. சுந்தரி, க/பெ.திரு.சுப்ரமணியன் வீட்டிற்கு வடபுறம் மற்றும் தென்புறம் சுற்றுசுவர் கட்டி ஆக்கிரமித்துள்ளது கண்டறியப்பட்டதால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 128-ன்படி

அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், கட்டிட அனுமதி பெற்ற ஆவணங்களை சமர்ப்பிக்க கோரி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133, 135–ன்படி அறிவிப்பு படிவம் 1–ல் வழங்கப்பட்டுள்ளது என்பதும், இதன் தொடர்ச்சியாக படிவம் 2 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு அளிக்கப்பட்டு உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மனுதாரர் குறிப்பிட்ட வரைப்பட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டு இருப்பின் அது குறித்தும் உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மேற்கண்ட கட்டிடத்திற்கு மனுதாரர் தெரிவித்ததற்கு மாறாக தரைதளம் மற்றும் முதல் தளத்திற்கு சொத்துவரி விதிக்கப்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியால் வரி வசூக்கப்பட்டு வருகிறது என்பதும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டல உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி நகர திட்டமிடுநரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள, கோயம்புத்தூர் தெலுங்கு பாளையம் கிராமத்தில் SF 354, 355/1,மற்றும் 359ல் அடங்கியுள்ள நிலத்தை ஸ்ரீராஜராஜேஸ்வரி எஸ்டேட்ஸ் என மனை பிரிவு செய்து அந்த மனை பிரிவுகளில் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளது தொடர்பாக மாண்புமிகு கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No.135/2025 நிலுவையில் உள்ளது என மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்காண் சூழ்நிலையில், வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது கருத்தில் கொள்ளப்பட்டது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,
Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட மனைப்பிரிவில் சொத்து குறித்து கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S. No.135 of 2025–ல் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. M. பிரபாகரன்,
பழைய எண் 25, புதிய எண் 14–1,
விவேகானந்தர் வீதி முதல் கிராஸ்,
P.N. புதூர், கோயம்புத்தூர் –641 041.

(2) ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்–641 001.

(3) உதவி ஆணையாளர், மேற்கு மண்டலம்,
கோயம்புத்துர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு தமிநாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ. கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர். 14/10/26

14/10/26